உ

காட்டுப்புத்தூர்

ஸ்ரீ நாராயண பிரமேந்திர சுவாமிகள் சரித்திரம்.

சங்குவால் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது,
இரங்கோன்,

1924

உ

காட்டுப்புத்தூர்

ஸ்ரீ நாராயண பிரமேந்திர சுவாமிகள்

சரித்திரம்.

சங்குவாலி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது,
இரக்கூன்,

1924

அறிக்கை.

ஸாது ஸ்ரீவ. பாலகிருஷ்ண முதலியாரால், வடமொழியிலிருந்து தமிழ், தெலுங்கு பாஷையில் மொழி பெயர்க்கப்பட்ட, அடியில்கண்ட புத்தகங்கள், பின்வரும் விலாசத்திற்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம்.

		ரூ	அ.	பை.
1. அத்யாத்ம ராமாயண வசனம்	(தமிழ்)	2	12	0
2. ,, ,,	(தெலுங்கு)	2	8	0
3. அவதூத யது சம்வாதம்	(தமிழ்)	0	6	0
4. ஷிடி முதலியாருடைய சரித்திரமும் அவருடைய அனுபவ வாக்கியங்களும்,	(இங்கிலீஷ்)	0	8	0

(தபாற் கூலி வேறு.)

விலாசம்:—

அமிருதம்மாள்,
புதுத்தெரு.
காட்டுப்புத்தூர்,
திருச்சினுப்பள்ளி (மார்க்கம்)

ஓம்

ஸ்ரீ சற்குருவே நம:

திருச்சிற்றம்பலம்.

முகவுரை.

ஸ்ரீமத் நாராயண பிரமேந்திர சுவாமிகள் காட்டுப்புத்தூரில் சுமார் 63 வருஷங்கள் வாசஞ் செய்து வந்தனர். இவர் மஹா சமாதியெய்தி இற்றைக்கு 13 வருஷங்களாகின்றன. இம்மஹானுடைய மாத வருஷ நக்ஷத்திரத்தில், இவரது சமாதி ஆலயத்தில் இவ்வூர் அன்பர்கள் கூடி திவ்விய அலங்காராதி பூஜைகளியற்றி, ஏழைகளுக்கு அன்ன வஸ்திரமளித்து, சத்காலக்ஷேபங்கள் அதி விமரிசையாக நடத்திக் கொண்டாடி வருகிறார்கள். அதுகாலை வெளியூர்களிலிருந்தும் அநேக அன்பர்கள் இங்குறுவர். அநேக வருஷங்களாயிவரைத் தரிசித்து சம்பாஷித்த அன்பர்கள் வாயிலாக மஹானுடைய சரிதங் கூறக் கேட்டு ஆனந்தமடைவர். இன்னவர் மனோபீஷ்டத்திற் கிணங்கியே இச்சரிதம் வெளியிடத் துணிந்தோம்.

இம்மஹானுடைய கொள்கையுநிலையும், மற்றுமுள்ளன சரித்திரத்திற் காணலாம். இவர் தம் இறுதிவரையில் தமையடைந்தாரிடம் சம்பாஷிக்குங்கால், ஒருவர் இம்மை மறுமையினும் சுகமடைய முக்கியமாய் இல்வாழ்க்கையை இன்பாகாரமாகக் கொண்டு, அதை நடத்துங்கால். சாந்தம், நிதிவருவாய், சமபாவனை, கிரியைப் பலனில் அபேக்ஷையையாமல் ஈஸ்வரார்ப்பணம் செய்து வருவாராகில், சித்தசுத்தியும்,

முறையே. ஞான நல்வீடு பெறலாமெென வற்புறுத்திக்கூறு வதைஅத்தகையர் உபதேச மொழியாயேற்றுமீருவர் மஹா னவர்கள் தெலுங்கு பாஷையில் வல்லுனராதலின், சம்பா ஷணை பத்யங்களாக வமையும். அவற்றின் சாராம்சமே தமி ழ்க் கோர்வையாக விளக்கிபுகட்டுவர். அவ்வாக்கியங்களையே (மிகுதலும் குறைதலுமின்றி) அன்பர்கள் குறித்து வைத் தவை மாத்திரம் ஆங்காங்கு சேர்க்கப்பட்டது.

இம்மஹானின் திருவுருவப் படம் அன்பர்கள் கண்டு களிக்குமாறிப் புத்தகமுதலிற் சேர்க்கப்பட்டிருக்கிறது.

"தொண்டர் தம்பெருமை சொல்லவுமரிதே" என நற் தமிழ்த்தாய் ஔவையார் மொழிபேற்றும் மஹானின் சரிதம் அன்பின் மிகுதியால் அச்சிட்டு வெளியிட்டதையும், இதன் கணுள்ள குறைகளையும் பொறுத்தருள தாழ்மையாய் கேட் டுக்கொள்ளுகிறோம்.

ஸ்ரீ நாராயண பிரமேந்திர சுவாமிகளின்
மடாலய பரிபாலனரில்

புதுத்தெரு
காட்டுப்புத்தூர்
27—1—24.

வெங்கடசாமி சுவாமிகள்.
அமிருதம்மாள்
பழனிசாமி.

இம்மஹானை அறிந்த அறிஞர்களனைத்தர், இப்பதிப்பில் அறியாது விடுத்தனவற்றை, அன்புகூர்ந்து அறிவிப்பரேல் இரண்டாம் பதிப்பிற் சேர்க்க அபேக்ஷையுள்ளோமென வண க்கமாய் அறிவிக்கிறோம்.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

இன்னுரை.

திருமூர்த்தி ஸ்வரூபரூப லக்ஷணத் திரிகுணகண பத அருத்தமாய், யோகி ஜன்ம சம்சார பந்த நிவிருத்திக்கு யோக்ய கதா அஷ்டாக்ஷரமாய், நாராயணாய இதி பஞ்சாக்ஷ ராணி யெனவே, வேதோப நிஷத்துக்களின் துணிபுமாய இயற்கைத் திருநாமம்பெற்று, பூர்வ ஜென்ம புண்ணிய வசத் தால் சத்வகுணசம்பன்னராய் உற்பவித்த இம் மஹான், இளமை யில் கிருபா சக்தியின் இன்னருள் பிரசன்ன லப்தராய், 'இனி யுனக்கு ஜெனன மில்லை' யென (பக்கம் 4, 5) சாதிக்கப்பெற் றும், 'நாராயணன் என்ற நாமத்துடன் விளங்குகிறாய்' என்று அருதியிட்டும், துறவற நிசையில் (பக்கம் 21) இம் மஹா னின் வாக்கியம் 'இனி கொடுத்து வாங்குகிற கடவுளரில்லை' என்றும், மற்றும் (பக்கம் 29) இருக்கப்பட்ட கடவுளைக் கண்டு உபதேசம்பெற வந்தோம் என்றதின் சார்பாக, (பொய்கையாழ்வார் அருளிச்செய்த நாவாயிலுண்டே நமோ நாராயணாவென்ன என்ற திவ்ய ப்ரபந்த இயற்பா யிரச் சொற்படி,) பகவத் தியானத்திற்கு சுலபமாய் மனோராஜ்ய ஹேதுவாயுள்ளது நாமாவளி பதங்களே என்பர் பெரியார்.

ஸ்ரீராமகார்ய துரந்தரரான ஹனுமந்தரை யேமாற்றம் புரிய ராமநாமஸ்மரணை செய்த காலநேமியின் வயப்பட்டு மாருதியும் கிஞ்சித் காலம் இலக்காயினரென்பது, இதிகாசம். ஆகவே, ஆன்மாக்கள் பலர் ஒன்றுகூடி ஈஸ்வர தியான நாமாவளிகளை உபாசிப்பரேல், மஹனீயர்கள் உலகோத்தார ணம்புரிய (உலகின் கஷ்ட நிவாரணையாக) அவதரிப்பார்க ளென்று ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா தனஞ்சயனுக்கருளிய கீதா நிர்ணயம் என்பது ஆன்றோர் அபிப்பிராயம்.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாயநம :

நாலாயிர திவ்யப் பிரபந்தம்.

நாவாயிலுண்டே நமோ நாரணாவென்று
ஓவாதுரைக்கு முறையுண்டே—மூவாத
மாக்கதிக்கட் செல்லும் வகையுண்டே யென்னொருவர்
தீக்கதிக்கட் செல்லுந் திறம்.

சரணாகதி வாக்ய நாமாவளி.

நமோநா ராயண நமோநா ராயண
நமோநா ராயண நமோ நமோ
நமோஹரி நாரா யணபிர மேந்திர
நாதன் சத்குரு பாதமேகதி. (நமோ நாராயண)

சோம ஸூரியப்ர பாஹர சோபித
வ்யோமகுண்டலி நாத கலாதர
ஹம்ஸோ பாஸக மந்த்ரோத்தாரக
ஸோஹம்பாவன ஜோதிவசக்ருத (நமோ நாராயண)

மூலோத்பவஸ்திதி சங்கா ரார்த்தமு
முக்கிய சத்துவ ரஜோதமோ
காலத்திரிகுண தாருஷ முக்குரு
கர்த்தவ் யாதிக காரண ரூபமே (நமோ நாராயண)

தனுகரணாதிபு வனபோக்யாதிஷு
தாஸ்யமுசேஸி தன்யலே யதிகே
அனுக்ரஹமைன ஆக்ஞாபிஞ்சின
ஹரிநாராயண பிரம்மபாத்துவ (நமோ நாராயண)

சரணுகதி வாக்ய நாமாவளி.

ஆகம வேதபு ராணேதிகாசமு
அந்தரு செப்பின எந்தோ மாட்டலு
மோகமு தீரின முமுட்சுலு தியானமோ
ஏகோ நாரா-யணம்ப்ஜே-ஏகோ நாராயணம்பஜே (நமோ)

சைலமுலோஸ்ரீ நிவாஸதேவுடு
க்ஷேத்ரதரிசன லலாடமத்யமு
சித்தம் மனிகமஸ் காரமு சேசுகோ
ஜெயஹனுமந்தோ ஸ்ரீ ரகுநந்தன (நமோ நாராயண)

கிரியாமார்க்கமுப சாந்தமுகானி
கிரமோபாயம்லா முக்திமார்க்கமுகே
அரியாசனடப் பைரெண்டேதிலுனி
அமரிஞ்சினமன பாஷியக்காருகே (நமோ நாராயண)

ஹரிதாசுலுசர ணாரபதாம்புஜ
ஆர்த்திகசேவச தாஹிருதயமுலோ
ஆனந்தமைன நகார ப்ராணவ்
மனுஷ்டானமுசேய் ஆனந்தஜீவோ (நமோ நாரர்யண)

மச்சகச்சவ ராகவாமனா சிம்மபாசுராம
பலபத்திரகோ பாலகலிக்கியவ தாரமுசேசினதி
இச்சாமயஜக மாயனுவதலி ஸ்வருபனுசந்தமுகே
இத்தருக்குமன எந்துகுபனிபெட் டேதி ஒஜீவோ (நமோ)

அத்ருப்ருகு உத்ஸ வசிஷ்ட்ட கௌதமகாசிபாங்கிர்ஸ
அகிலபாகவதரிஷிமுனிவ்யாசுடாள்வாரெம்பெருமான்ஜீயர்
எதிவரவரமுனி பூர்வாச்சார்ய லவதாரபாரத பூமிலோ
என்னோமுக்தரு யீஸ்வரநிர்ணய மீதேசத்நியமன்னாரு (ந)

நாடுதனயனமு லேசி பய்ற்ற குடக
நாஸ்தி ஜெனன சங்காரமு ரெண்டுனி
தர்ஸன நயனு லயமுலொ ஸ்ரீஹரி
தாஸ்யலு மதிர ஹிருதய கேசவ (நமோ நாராயண
நமோநாராயண நமோநாராயண நமோ நமோ).

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீராமாவதாரத் திருவங்கமாலை.

"தலையே நீ வணங்காய்" தச ரதரகு ராமன்றன்னைத்
தாடகையைக்கொன்று வேள்வி முடித்தோனைத் (தலையே)

"கண்காள் காண்மின்களோ" கரு ணாகரநாயகனைக்
கானகந்தனிற்கல்லைப் பெண்ணாகச்செய்தோனை(கண்காள்)

"செவிகாள் கேண்மின்களோ" சிவ னார்தனுவை முறித்து
ஜெகமாதைமணந் திட்ட ஸ்ரீராமனை (செவிகாள்)

"மூக்கே நீ முரலாய்" முனி ராமன் செருக்ககற்றிக்
காக்குமயோத்திக் கலியாண ராமனை (மூக்கே)

"வாயே வாழ்த்துகண்டாய்" வனந் தன்னிற் குடிபோக
தாய்கைகைதச ரதர்சொற்காத்தோனை (வாயே)

"நெஞ்சே நீ நினையாய்" திரு பஞ்ச வடிதீரரை
அஞ்சா திருமென் றபயங் கொடுத்தோனை (நெஞ்சே)

"கைகாள் கூப்பித்தொழீர்" கருமாமுகி லெம்மண்ணலை
காகுத்த னுஞ்சித்ர கூடத்தைக் காத்தோனை (கைகாள்)

"ஆக்கையாற் பயனென்" கர தூஷண சம்மாரனை
நாக்கொண்டு நமோ நாராயணா வென்று (ஆக்கை)

ஸ்ரீராமாவதாரத் திருவங்கமாலை.

"கால்களாற்பயனென் கலை மானென்று தன்னைக்கொன்றோன்
சேல்தாவுஞ்சோலை அரங்கஞ் சூழாக் (கால்களாற்)

"உற்றாருளர்காண்" உயிர் ஏமன்கை யாகும்போது
பற்றும்விபீஷணர்க் கரசீந்தோனல்லால் (உற்றாருளர்)

"இருமாந் திருப்பென்கொலோ" இலங் காபுரன் சிரத்தை
ஏந்துமோ ரம்பினா லீர்த்தானைத்துதியா (திருமாந்)

"தேடிக் கண்டுகொண்டேன்" திரு மால்வளர் சிரயோத்தி
நாடிப்பட்டா பிஷேகங் கொண்டானையே (தேடி)

நாமம் நாமறிவோம் நமோ நாராயணாயெனவே
மாமணிமாடவேல் மங்கையர்கோன் சொன்ன (நாமம்)


கூடி நாம் தொழுவோம் குரு நாரண ப்ரமேந்த்ரனை
குயிலின மதுரக் குரல்காட்டும் புத்தூரில் (கூடி)

"—" இக்குறியுள்ளன வரைக்கும் ஸ்ரீமத் பரமாசாரியராய திருநாவுக்கரசுசுவாமிகளின் தேவாரத்திருவாக்கை யனுசரித் தெழுதியது.


௨

பதினான்கு சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அண்டர்கள் போற்றும் வடமலை யுளனு
யவனியர் தொழுதுய் வுறரியா
பரவணி யரனு மயனுமா யவர்பா
லமர்ந்திடு சத்திகண் மூன்றாய்த்
தொண்டுறு மனத்தன் கருடனே சேனை
வரையறு தம்பிமா முகனுத்
தோகையூர் குகனு யாதவ னிந்தாய்த்
தூமறை மொழிசடா ரியுமா
யெண்டிசை விஜயன் பாஷியம் புகன்ற
வெம்புதூர் வருமுனிச் சுரனு
மெண்மனக் கோயிலி லெழுந்துகோ விந்த
னேற்றுமா ரணப்பமேந் திரனுக்
கொண்டல் ராவணனைத் திட்டுங் கோதண்டக்
கொற்றவன் சிதைம ணாளன்
குவலயம் பரவுமெய்ஞ் ஞானபூ ரணனது
குரைகழல் வணங்கிவாழ் குதுமே.



ஸ்ரீ நாராயண பிரமேந்திர சுவாமிகள்.



ஓம

ஸ்ரீ சற்குருவே நம :

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ நாராயண பிரமேந்திர சுவாமிகள் சரித்திரம்.

நிலங் கடந்த நெடுமுடி யண்ணலை உலகந் தவஞ்செய்து வீடுபெற்றமலை யென அறிஞரால் புகழாநின்ற திருவேங்கட மலைக்கடுத்த சித்தூரைச் சார்ந்த வேட்கூர் கிராமத்தில், வானமே பெறினும் இம்மாய வாழ்க்கையில் ஊனமேயிருத்த லென் றுன்னி, வீடு பேற்றை யடைவான் வேண்டி, தம்மில் இன்சொல்லும் வாய்மையும் பூண்டு, வைணவ மரபி னுதித்த ஸ்ரீமான்: வேங்கடாசல ரேட்டியார் என்பவர் பிறவிச் செல்வராயும் கிராமதர்மகர்த்தாய், தான்பெற்றபேறு மக்களனைவரும் பெறக் கல்விக் கழக மமைத்து, தக்க புலவர்களைக் கொண்டு கிராமவாசிகட்குப் பகவத் குணானுபவங்களைச் சிரவணிக்கச் செய்தும், நாவலர்க்கு நன்கொடையீந்தும் ஆலயத்திருப்பணி முதலிய தியற்றியும், கற்பிற் சிறந்த மனைவியுடன் இல்லறம் நடாத்தி வந்தனர்.

கோதறு தவத்து தன் குலத்துளோர் தொழும் ஆதியஞ் சோதிபால் பக்தி வாய்ந்தவராய், வேங்கடமாமலை சென்று எம்பெருமானை வழிப்பட்டு, அழகிய மக்கட் பேற்றையும் அடைந்து, புதல்வர்களுக்கு பலநல்விழாக்கண்டு வேதியர்க்கு வேண்டுவன நல்கி, ஞாதியர்க்கு நல்விருந்திட்டு, உபநயன முதலியதும் செய்வித்து இன்புற்று வாழ்ந்தனர்.

பிறப்பு:—இப்புதல்வர்களில், நான்காவது புத்திரராகக் கலியுகம் 4892-க்குச் சரியான ஆங்கில 1791-ம் வருஷத்தில் (இந்நூல் நாயகர்) நாராயண ரெட்டியார் என்பவர் பிறந்தனர்.

கல்வி :—முறைப்படி, இவரது தந்தையார் இவருககு ஐந்தாம் வயதில் வித்யாரம்பஞ் செய்வித்துத், தமது சுய பாஷையாகிய தெலுங்கில் விற்பன்னராமாறு ஓதுவிக்குந் திறமைவாய்ந்த வேதிய ரொருவரால் கல்வி பயிற்று வித்தனர். நாராயண ரெட்டியார் பூர்வ ஜென்மப் புண்ணிய வசத்தினல் சூட்சம புத்தியும், கல்வியில் ஊக்க முடையவராய்ச் சில வருடங்களில் சுயமாக பத்யங்கள் பாடவும், வேமன்ன சதக முதலிய திவ்ய நூல்களின் உட்கருத்துகளைக் கிரகிக்கவும், பிறருக்குப் புகட்டவும் திறமை வாய்ந்து விளங்கினர். இவர் தம்பிளமைப் பருவத்தில், தன்னெத்த சிறுவர்களுடன் ஆலயங்கட்குச் சென்று, இஷ்டானுசாரமாய் நவநவமான கீதங்களைப் பாடியும், உற்சவதினங்களிற் கூட்டமாகச் சென்று பகவத் நாமங்களை ஓர்முகமாய் உத்கோஷிக்கச் செய்தும், அவ்வின்பாகாரமான ஜனசமுகங்களின் ஆர்வமே கடவுளிருப்பிட மென்று நம்பிக்கையுடன், மனேலயமாகும் பக்தியைக் கைப்பற்றி வந்தனர்.

இல்லறம்:—தக்கபருவத்தில், தாய்தந்தையருந் தம்மைச் சார்ந்த வுறவினருந் தம்மை விவாகஞ் செய்துக்கொள்ளுமாறு பன்முறை வற்புறுத்தியும், அவர்கள் கருத்திற் கிணங்காராய்ப் பகவான் பேரில் அந்தரங்க சிரத்தா பத்தியிலுங் குடும்பக் கடமைகளிலும் யாதோர் குறைவின்றி நடந்து வருவர். இவரது தேகத்தில் ஓர்வித *வெப்பம் இருந்தமை கண்டு, சிலர் இத்தகையார்க்கு மணஞ்செயாதிருத்தலே யுக்தமெனப்புகன்றனர். ஆனல் இவருடைய பந்துக்களிலொருவர் தன் மனைவியின் தங்கையை விவாஹஞ் செய்விக்கத் துணிந்து, இருதிறத்தாரின் தாய் தந்தையர்களைத் தன் கருத்திற் கிணங்கச் செய்து, நல்ல சுப தினத்தில் நாராயணரெட்டியாருக்கு லக்ஷுமியம்மாளைத் திருமணம் செய்வித்தனர். இத்ததியில் இவரது வயது நாற்பது. இக்காணருங் காட்சி கண்டுகந்து தாயருந் தந்தையும் மிக்கதோர் மனமகிழ்வுடன் பேரானந்த மெய்தினர். இவரது மனைவியார் லக்ஷுமி அம்மாள் தமது இயற்பெயர்க்கேற்பக் கணவருக்கு இயற்ற வேண்டிய ஊழியங்களில் வழுவின்றியும் தன் மாமி மாமன்மார் மற்றுமுள்ள பந்துக்களிடத்து மிக்க மரியாதையும் அன்பும் பாராட்டி இல்லத்து ஒத்து வுழைத்து வாழ்ந்து வருங்கால், எல்லாம் வல்ல இறைவனதருளால் ஒரு ஆண் மகவும் ஒரு பெண்மகவும் பெற்றனர். ரெட்டியார் அவர்கள் தம்மக்கள் இருவருக்கும் கல்வி பயிற்றுவித்து, குமாரத்தியை தக்க பருவத்தில் உத்தம குணங்கள் வாய்ந்த பிள்ளைக்குக் குலதருமத்திற்கேற்ப மணம்புரிவித்து பெண்ணின் வாஞ்சையினல் தம்பதிகளுக்கு அளவற்ற திரவியமும் சீதனமாக அளித்துத் திருப்த சித்தராயிருந்தனர்.

---

* தவச் சுரம்.

துறவறம்:—எக்காலமும் செட்டியார் அவர்களின் மனம் இடைவிடாத விஸ்ராந்தி நிலையிற் பொருந்தி, ஆனந்த நிட்டையி லாழ்ந்திருப்பார் இவரது ஐம்பதாவது வயதில் ஓர் தினம் அரியதுயிலில், பரமேஸ்வரி தோன்றி:—

" மகனே ! உனது ஆறமவயதில் கார்த்திகைத்
" தீபத் திருவிழவில் சிறுவர்களுடன் சேர்ந்து
" சுடர்ச் சுற்றி விளையாடித், தனிமையாய்
" ஆற்று மணலில் நம்மைத் திருவுரு வமைத்து
" வழிப்பட, யாம் எம்முடைய காட்சி தந்து,
" இனி உனக்கு ஜனனமில்லை என பகர்ந்ததை
" நினது உளத்தில் வையாது மறந்தனையோ !!
" பின்னைப், பிறவித்துயரற ஞானத்துள் நின்று
" துறவிற்சுடர்விளக்கங்கலைப்பெய்த இல்வாழ்க்
" கையை விட்டகலுதி "

எனச் சாற்றி மறைந்தனள்.

உடனே துயிலகன்று, தாம்கண்ட காட்சியையும், பராசக்தியின் வாக்கியத்தின் மாட்சிமையையும் தமது ஆறும் வயதில் நிகழ்ந்ததையு முன்னிச்சிந்தித்து, துறவடைய மனமில்லாமல், தமது இல்லத்தில் உற்றார் மற்றார் அநேகர் உண்டுடுத்தி யின்புற்றிருக்க தாம் லச்சைவிட்டு ஒருகவள அன்னத்திற்கு பிறரிடம் யாசிக்க நேரிடுமே யென்று கலங்கினவராய் வீற்றிருந்தனர். மற்றுமொருதினம் புராந்தகி பிரசன்னமாகி உனது மனத்தெழும் லச்சை ஒழிதி

கூட்டிக் கேமி கவுகு
குலவரிட்டி ஜனக்கு
எட்டிமேரவன வரக்கு
வேலப் பல உண்டி பிவுச்சி
பெட்டமண்டானு பிரமத்திலோ உன்னி.

நாம் உணவு கொடுப்பிப்போம் அஞ்சற்க வெனப் புகன்றனள்.

இதன்பிறகும் ரெட்டியார் இல்லந் துறக்க விருப்பிலராய் தாயே! உமதடித்தொண்டு புரிவதில் எக்குறை நிகழ்வினும் பொறுத்தருளிதி, உம்மை நமஸ்கரிக்கிறேன், உமது பாத பங்கஜ நிழலமர்ந்த யிவ் வீட்டின்கணென்னை வைத்துக் கடாக்ஷிக்க வேண்டுகிறேன், உமக்குத் தொண்டு பூண்டொழுகு மெளியேனைத் தாயற்ற குழவி யன்னத் தியங்கி யலையக் கைவிடப்படாது எனவே, யிருகரங் கூப்பித் தொழுது வீற்றிருந்தனர்.

அன்பிற்கெளியையாம் அம்மையார், மூன்றாவது தரம் தோன்றி,

> "ஓ! ஒருமை நிலைவாழுத்தமனே! நீ முதல் பிராமண குலத்திலும், இரண்டாவது புலையனாய், மூன்றாவது ஓட்டனாய், இப்போது ரெட்டி மரபி லுதித்து நாராயண ரெட்டியென்று பெயர்வகித்து விளங்குகிறாய். உன் ஜென்மம் சாபல்ய மடையவும், நீ நித்தியப் பேறு பெறுவதற்குத் துறவறம் எற்றதாதலால், அதை யடைதி"

யென்று சாதித்தும், ரெட்டியார் இல்லத்தை விட்டகலாது அகிலாண்ட நாயகியை முன்போலவே பிரார்த்தனை செய்து சிலகாலங் கழித்தனர்.

அம்மையாரோ மறுபடியும் நான்காவது தரந்தோன்றி,

> "நின் குழப்பத்தை அறவே ஒழிதி, எமது தரிசனபலன் உனக்கு துன்பமகற்றி யின்பம் பயக்கத் தக்கது. எனது மகா மாயையின்

வல்லபத்தை உள்ளபடி யுணர்ந்தார் ஒரு
சிலரே யாவர். பிறவிக்கே காரணமா யுள்ள
இன்பமுந் துன்பமுமாய அலைகள் வீசுஞ்
சாகரமான இல்வாழ்க்கையி லிருந்துகொண்டு
பிறவிக்கடலை நீந்துவது அருமை! அருமை!
என் மொழியின் உண்மையறிய விரும்புவை
யேல், ஒரு முழத்துண்டில் ஒரு பைசாவை
முடிந்து, முழக்குழிபறித்து முடிப்பையிட்டு
மூடி, ஒருவாரங் கடந்தபின்னர் நீ சேமித்து
வைத்த விடத்தில் அஃது நிலைத்து உளதா!
கண்டறிதி'' யென்றியம்ப, அவ்வாறே செட்டியார் செய்து
குழியில் அம்முடிப்பைக் காணாது, புதைத்த விடம் மாறுத
லாயிற்றோவெனச் சங்கேதித்து இரண்டாந்தடவையு மவ்வித
மியற்றி, இடத்தையுங் குறிப்புவைத்து, வாரங்கடந்தபின்
பரிசோதித்தார். அம்முடிப்பும் நிலைத்திராமைக் கண்டஞ்சி,
இதன் உண்மை யின்னதென உணர்த்துமாறு வருந்துகையில்,

"காசைத் தொட்டாற் கருமம்
கடத்திலிருந்தாற் கருமம்
பிறந்திறந்தாற் கருமம்
பிலத்துளே ஓங்காரமாகிவிட்டால்
பிறிதொரு கரும முனக்கில்லை"

என வித்தகி யருளினள்.

இதினின்றும், செட்டியாரவர்கள், தன் பெருங் குடும்பத்தில்
உடற்பற்றோம்புறற்சுற்றத்தாரினும், உழைப்பிற் கேதுவாக
அமைந்திருந்த முக்கிய காரியஸ்தர்களும், சுமார் முப்பது
பேர்கள் வின்னுலகுற்றதையும், அழகிய விம்மனைமாட்சியை
முன்னிட்டும் பற்பலவாய சச்சரவுகளும் அல்லல்களும்,

விளைந்ததைச் சிந்தித்து, பரமேஸ்வரியின் கட்டளைப்படி தான் மனையை விட்டகலாமையே அத்தகைய நிகழ்ச்சிக்கு ஒருகால் காரணமாயிருக்கலாமென் றோர்ந்து, இன்னமும் நாயகியி னியக்கம் எவ்வாறுமோ வென அஞ்சலி யஸ்தரா யிருக்கையில், அம்மையார் சுசீலரைக் குளிரக்கடாக்ஷித்து,

"பன்றியாய்ப்பிறந்து பசித்தபோது
மலமுண்டு ஜீவிக்கவில்லையா ?
நாட்டுக்குள்ளே தோட்டியாய்ப் பிறந்து
மாட்டைக்கட்டிச் சுமக்கவில்லையா ?
மார்நோகத் திருவோடு சுமந்தால்
தேகம் இளைத்துவிடுமா ?
போடா வெளியே"

எனத் திருவாய் மலர்ந்தனள்.

இன்னம் இவ்வாக்ஞையை மீறி நாமிங்கிருப்பது வுசித மன்றெனத் தேர்ந்து, தாயே! நின்பொன்னடி நிழலைவிட்டுப் பின் னடிவையேன். அடைக்கலம் அடைக்கலம் அன்னை! நின் அடைக்கலம் என்று கடன்மடை திறந்தன்ன ஆனந்த வாரி பெருக, உள்ளமுருக, உடலும் புளகிதங்காண, ஆனந்த பராகினராயெழுந்து வெளிப்பட்டு, எங்கணுந் தங்காராய்ச் சித்தூர் வந்து சேர்ந்தனர்.

இவரது சுற்றத்தாரும் மருமகன் முதலிய பலரும் பற்பலவிடங்கள் சுற்றித்தேடிக் கடைசியாக சித்தூரில் வசிக்கின்றாரெனத் தெரிந்து, இவரைக் கண்டுவணங்கி,

"தேவரீர் இக்கோலமாய் வெளிப்போந்தது தருமமேயோ? தங்கள்மீதன்புமிக்க வெம்மனோர்க்கு இனியது கூறி இன்று விலக்கும் பெரியா ரினியாவரே யிங்கெமக்குளார். தேவரீருடைய அளவுகடந்த சப்பத்துக்கு யாதோர் குறைவு நிகழ்ந்திலவே! தங்களிஷ்டம்போல மனையின்கணிருக்க, யாம் தமதேவலை எதிர்நோக்கிப்புரியுங் கடமைப்பாட்டால் புனிதராவோமே! அடியேங்களுடன் தாங்கள் எழுந்தருள வேண்டுமெனப் பிரார்த்தித்தார்கள்.

செட்டியார் இம்முறைகளுக்குச் செவிகொடாமல் அவர்களை நோக்கி, இனிய மொழிகளால் இச் சன்மம் பூர்வ கன்மத்தாலாகியது, அதன் தொடர்பால் வுங்களுறவும் ஏற்பட்டுப், பிரியுங் காலங் கிட்டியதால் உங்கள் சம்பந்தம் விலகியது. எனக்குயாதொரு குறைவுமில்லை. நம்மெல்லோருக்கு மேலா மீசனதருளால் யாதுங் குறைவுறாது, உங்கள் அலுவலை நோக்கிச் செல்லுங்கள், எனக்கூறிய பின்னரு மன்னோர் வற்புறுத்த, அவர்களின் வேண்டுதலை யேற்காது தன்னிலையில் மௌனமுற்றிருந்தனர். வந்தாரனைவருந் தந்தம் மிருப்பிடஞ் சென்றனர்.

சித்தூர் ஜனங்களிற் பெரும்பாலர், இவரைத் தெரியாதவர்களல்லர். சிலர வுதாபமடைவதும் இளம் பிராயத்திருந்தே இவரைக் கவனித்து வந்தவர்கள் இவர் இக்கோலம் பூண்டது நிவிருத்தி மார்க்கத்தைக் கருதியோ வென்றும், மற்றுஞ்சிலர் இம்மஹான் பிரம்ம நிஷ்டரோ வெனவும், தந்தம் கருத்தி லுதித்தவாறு சொல்லிப் போயினர்.

இவ்விடத்தில் ஓர் ஏழை கோமுட்டிசெட்டி, செட்டியார் அவர்களை விசுவசித்துப் பிரதிதினம் ஒரு கைப்பிடி கடலைப் பருப்பும் அருந்த மோருந் தந்து, இவரது குட்சு பாதையை திருப்தி செய்ய ஏற்பட்டனர்.

சில தனவந்தரும் இவரைத் தரிசிக்க வரும்போது, பால் பழம் முதலியன கொணர்ந்து உபசரித்து சூழ்ந்தும், பலவித ஆடம்பரங்கள் புரிதலைக கண்ட இவர், அவைகளி லோர் சிறிதும் விரும்பாராய், இவைகள் தமக்கு அத்தனை அவசிய மானதன்று, தனக்காக யாதொரு சிரம மெடுத்துக்கொள்ளா திருக்கப் பிரியப்படுகிறேன் என்று அவர்களுக்குத் திருப்தி யுண்டாகுமாறு கூறி யனுப்பி விடுவர்.

அடிக்கடி ஜனங்கள் தம்மைச் சூழுங்கால், தம்மிடந் தவமேது, மகிமையேது, யாதொன்று மில்லை போமென்று தாம் அவ்விடத்தை விட்டு நீங்கி, ஆருக்குப் புறம்பான நதி யோரங்களிலுங் காடுகளிலுஞ் சஞ்சரித்து நிஷ்காமியாய் திரிந் தும், சிலவேளைகளிற் சித்தூருக் குள் வருவதுமாக யிருந்தார்.

இக்காலத்தும் கோமுட்டி செட்டி யிவர் திறத்து நடத்தி வந்த தொண்டை யதிக வுள்ளன்புடனும் தினந் தவறுமலும் நடத்தி வருவானுயினன். இவன் வியாபாரத்தி லடைந்த ஊதியத்தாலோ அல்லது எந்தகோரிக்கையை முன்னிட்டோ! யாமறியேம்.

இவ்வாறு மூன்று வருடங்கள் கழிந்தன. ஊர் ஜனங்க ளிவரைத் திரளாக வந்தடைவதும் போவதுமாக வேற் பட்டனர். இவரது நிஷ்டைக்குயிவை யிடையூறுக விருந்த

மையால், ஊரைவிட்டகலுவது உசிதமெனக்கருதி, வேங்கட மலைக்கீசுகி குகைவாசம் புரிவதெனத் தீர்மானித்தவராய்த், திருவேங்கடத்தப்பன்மீது தெலுங்கு பாஷையில் நூறு பத்யங்களை பாடியருளினர்.

இவரெண்ணத்திற்கு மாறாகத் "திருப்பதிக்குச் செல்ல வேண்டா மென்று" உத்திரவாக, எங்கணுந்தங்காராய், ஸ்ரீ தேவியைத்தேடிச் சென்ற அஞ்சனைசுதர் போந்தருளிய தென்திசை நோக்கி நடந்து, மூன்றுநாள் ஓர் சிற்றூரின் பாட்டையில் தங்கினர். அவ்வழியே சென்ற ஒருசந்நியாசி இவரைச் சந்தித்து நமஸ்கரித்தனர். இவர் அவ்வுபசாரத்தை யேற்றுச் சிறிது நேரஞ் சம்பாஷித்துப் பின்னர், தென்னாட்டிலே நம்போல்வாருக்கு நல்ல வாசஸ்தானமான வூர் எது வென்று அவரை யுசாவினர். அவர் தாம் வடதென் தேச முழுமையும் யாத்திரை செய்ததில் தென்னாட்டிலுள்ள பழனிமலையே சிறந்ததென்று சொல்ல, ரெட்டியார் அவர்கள் அம்மார்க்கத்திற் செல்ல லாயினர்.

உடனே சந்நியாசி இவரைத் தாமதிக்கச்செய்து, ஊரில் பிரவேசித்துச் சிறிது நேரத்திற் செல்லாந் திரும்பி, தான் கொணர்ந்த உணவை இருவருமாக வுண்ண வெண்ணி, யிவரையு மழைத்தனர். ரெட்டியார் அவர்கள் ஆகாரம் வேண்டா மென்று மறுத்ததினின்று, சந்நியாசி பின்வரு மாறு வினவலாயினர்:—

வினா:—சுவாமிகளே! ஏன் ஆகாரம் வேண்டாம்?

விடை:—சில வருஷங்களாக அன்ன மருந்துவ தில்லை, மீறிப் பசி உண்டானால், பிடி மணலுஞ்

ஜலமுமே ஆனந்த மாகும், தற்சமையம் எவையுந் தேவையில்லை.

வினா:—தங்கள் குரு எவரோ?

விடை:—"பார்க்கச் சொல்வது பரவெளி
"ரமிக்கச் செய்வது உள்வெளி
"உண்டு பண்ணுவது மனவெளி
"கண்டறிந்தால் ஜோதி வெளி
"தெரிந்துகொண்டவர்தான் குரு எனக்கு.

வினா:—சுவாமிகள் வேதாந்த விசாரணை மேலிட்டால் ஆகாராதி யிச்சையுந் தவிர்ந்ததாகத் தெரிகிறதே.

விடை:—"வேதாந்தம் வெளியாச்சு
"சித்தாந்தம் சோறாச்சு
"கண்டறியாதவர்கட்கெல்லாம்
"கருமதேக மாச்சு
"தெரிந்துகொண்டவர்தான் குரு எனக்கு.

சிந்தனை:—சந்நியாசி பின்னுந் தம்வாய்திறக்க அச்சமுற்றவராய், இவர் சாமானியமாக நம்போன்று ஆபத் சந்நியாசம் பூண்டவரல்லர். நாமோ ஆசைக்காற்றி லகப்பட்டுச் சுழன்ற பஞ்சை நிகர்த்து மோசமான விச் சந்நியாசக் கோலம் பூண்ட தலங்கோலமே ஆசாபாசம் அந்தத்தில் மோசம் என்றெண்ணிப் பாராமல், சோம்பேறியாகி வெளிப்பட்டேனன்றி எவ்வாசையை விட்டொழித்தேன். எச்சாத

னங் கைப்பற்றியுள்ளேன்? என்று தன்னைத்தானே நொந்து, இவர் ஓர் பெரிய மஹானாகக் காணப்படுகின்றனர். இவர் பானுதிக்கும் வாக்கியங்களோ மிகச் சுருக்கமும், விசேஷ பொருளைத் தன்னுள் அடக்கியதாகவும் விளங்குகின்றன, தெலுங்கு பாஷையில் இவ்வரிய விஷயங்கள் வரையப்பட்டுளதோ; நாமுந் தெலுங்கு பயின்றால் இவ்வறிவு வாய்க்கப் பெறுவமோ என்றுன்ன.

விடை :—"படித்தால் பல்லு தெரியும்
"பார்த்தால் பிரமந் தெரியும்
"தெரிந்துகொண்டவர்தான் குரு எனக்கு.

சிந்தனை :—இதைக் கேட்டதும் சந்நியாசி, தாம்நினைத்தது சரியன்று. தேசங்கடோறும் பற்பல பாஷாஞானம் மாறுபட்டே யிருக்கும். ஒவ்வொரு பாஷையிலும் ஆன்ம தத்துவ மறிந்த பிரபுக்களால் ஜகஜீவபரத்தின் லட்சணங்கள் கூறப்பட்டிருக்கின்றன, தெலுங்கு படித்தால் மட்டும் இந்த விசேஷஞானம் அடையக்கூடுமென்பதன்று; இவரதுவாக்கியங்களோ சுவாநுபூதியினுதிக்கின்றன வென்றெண்ணுகையில்.

விடை :—"படித்தால் சோறுண்டு பாபத்தைச் செய்யாதே
"அறிந்தால் சுகமுண்டு அபிராமியை முத்தமிட்டு
"கண்டால் கைலாயத்தில கௌரி உண்டு
"தெரிந்துகொண்டவர்தான் குரு எனக்கு.
"பிறக்கிறது பாவம் இறக்கிறது புண்ணியம்,
"இருக்கிறது கருமம், பிறப்பும் இறப்பும் நீங்கி யிருக்கிறது வுத்தமம்.

சிந்தனை :—இவ்வரிய வசனத்தைச் செவியேற்ற சந்நியாசி மிக்க வியப்புடன் இவரது கொள்கை தானென்னே? அபிமான மதம் வைணவமோ வன்றிச் சைவமோ! நெற்றியினிடத்தும் யாதொரு விபூதி-நாமச் சின்னமு மணிந்திலர், ஸ்நானஜபதபாதி கிரியா புரிபவராயு மிலர், சரீர சம்ரட்சணார்த்தம் அன்ன பனாதியுமின்றி யிவ்வாறிருக்கக் காரணந்தான் யாதோ?

விடை :—" நாமமிருப்பது ஊருக்குள்ளே—நாத
" நாமமிருப்பது நமக்குள்ளே
" வெள்ளி யிருக்கிற தூருக்குள்ளே—சுத்த
" வெளியிருப்பது நமக்குள்ளே
" முத்தியிருப்பது ஊருக்குள்ளே—வரு
" மூச்சிருப்பது நமக்குள்ளே
" கங்கையிருப்பது ஊருக்குள்ளே—ஜீவ
" லிங்க மிருப்பது நமக்குள்ளே
" மாணிக்க மிருப்பது ஊருக்குள்ளே—நல்ல
" மனக்கண்ணிருப்பது நமக்குள்ளே
" பஞ்சவர்னமிருப்பதூருக்குள்ளே
" பஞ்சபூத மிருப்பது நமக்குள்ளே
" அரிசி யிருப்பது ஊருக்குள்ளே—பர
" மானந்த மிருப்பது நமக்குள்ளே
" இதைத் தெரிந்து கொண்டவர்தான் குரு எனக்கு

" பிறந்தென்ன கண்டான் இருந்தென்னகண்டான்
" இறந்தென்ன கண்டான் யமலோகசூஸ்திரத்தை
" படித்தென்னகண்டான் பரமசிவதோத்திரத்தை
" தெரிந்து கொண்டவர்தான் குரு எனக்கு.

இம்மகா வாக்கியத்தைக் கேட்ட சந்நியாசி, மெய்மறந்து அச்சமுற்று எழுந்து திருவடிகளை வணங்கிப் பணிந்து, மடமை குடிகொண்ட வடிமை யறியாமல் அபசாரப் பட்டிருக்கின் மன்னித்து ஆதரிக்கப் பிரார்த்திக்கிறேனென்றார்.

செட்டியார் அவர்கள் இவரது அன்பிற்குகந்து இவரை ஆகாரம் உண்ணும்படி செய்து, பின்னிருவருமாக அவ்வெல்லையினின்றும் பிரயாணமாகி நெடுந்தூரம் நடந்துவருகையில், இடை யிடையே நேர்ந்த அமுதவசனங்களை வழித்துணை மருந்தாய்ச் சந்நியாசி செவியேற்றுத் திருச்சிராப்பள்ளி நகரையடைந்தனர்.

இவ்வூரினின்றும் கரூர் மார்க்கமாகப் பழனிக்கு செல்லுநர்களாய்க் கட்டளையென்றதோர்ச்சிற்றூ ரடைந்தனர். இவ்விடத்தில் காட்டுப் புத்தூ ரினின்றுந் திரும்பி வருகிற யிரண்டு சாதுக்களிடம் சம்பாஷிக்க நேர்ந்த காலையில், மேற்படியூரில் செட்டியார் மரபின் சீமானொருவர் ஏழைகளை யாதரித்து, அன்ன வஸ்திரமும் அரை ரூபாயும் வழங்க, யிருவரும் பெற்று வருகிறோம், நீவிருமாங்கேகின் அவை பெறலாமென கூறிச் சென்றனர்.

சந்நியாசி தற்சமையக் குளிருக்கோராடையும் வழிசெலவிற் கரைரூபாயும் கிடைக்குமாதலின், அதை பெற்றுக் கொண்டு பழனிக்கேகலாமென்று இப்பெரியாருடன் காட்டுப் புத்தூரடைந்தனர்.

இவ்வூர்க் கீழ்த்திசையுள்ள ஓர் சாவடியில் செட்டியாரவர்கள் தங்கி, சந்நியாசி தான் கோறிவந்த ஜோலியைப்

பார்த்து வருமளவும் அவர் வரவை யெதிர்நோக்கினவராய் வீற்றிருந்தார். இத்தருணம் அவருடைய அருட்பார்வை சில அன்பர்களின் மனதைக் கவர்ந்தது.

வேதாந்த விசாரணையும் சாதுக்களிடத் தன்புமிகுந்த 1. பாடசாலைச் சஞ்சீவி உபாத்தியாயர், 2. செவ்வந்திலிங்கம் பிள்ளை, 3. சந்திரசேகரம் பிள்ளை இம் மூவரும் இவரைத் தரிசித்துப் பணிந்து, சில நீதி சம்பாஷணைகளைச் செய்து, அரை ரூபாய் கொணர்ந்து இவருக்களிக்க வந்தனர். இவர் தனக்கெவ்விதச் செலவுமில்லையென அதை மறுத்தனர்.

பிறகு இம்மூவரும், இப்பெரியார் சர்வசங்க பரித்தியாகராய் வரிட்ட பதவியில் வெளிவந்தவரென மதித்து, இவரை இவ்வூரிலேயே தங்கியிருக்கும்படி வேண்டினர்கள். இவர், அவர் வேண்டுகோளுக்குப் பதில்கொடாமல், தன்னை யிங்கழைத்து வந்தார் இவ்வூர்க்குட் சென்றுளார் என்று கூறினர். உடனே மூவரும் ஊருக்குட்சென்ற சந்நியாசியைக் கண்டு, தங்களுடைய மனோபீஷ்டத்தை வெளியிட்டு, அவரை யிணங்கச்செய்து, இருவரையும் வேறெங்குஞ் செல்லாமல் இவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களையும் நடத்திவந்தனர். சில மாதங்களுக்குப் பின்னர் சந்நியாசியார், பழனிக்குச் செல்வதாக சுவாமிகளுக்குத் தெரிவித்துச் சென்றனர்.

இவ்வூர் ஒரு ஜமீன், இரண்டுமைல் தூரத்தில் புண்ணிய நதியாகிய காவேரி பாய்கிறது. ஆகையால் இவ்வூரிலுள்ள பெரும்பாலர், விவசாய ஜீவனஞ் செய்கிறவர்கள். அவர்களிடத்தில் அன்பு, இரக்கம், ஈகை, உழைப்பு, ஊக்கம்,

ஒற்றுமை, கடவுள் பக்தி யித்தியாதி நற்குணங்கள் வாய்ந்திருப்பதைக் கண்டோ, அல்லது எக்காரணத்தாலோ சுவாமிகள் பழனிமலைக்குப் போவதை மாற்றி, ஊரார் அமைத்த ஓர் குடிசையிற் றங்கியிருந்தனர்.

இவர் ஆதிநாளிலிருந்து அமையப்பெற்ற சாதனையினால், ஊராரை யாதொரு சம்ரக்ஷணைகட்கு எதிர்பாராமல், காவேரி தீரத்திற்குத் தனிமையாகப்போய் ஒருபிடி ஆற்றுமணலும், ஒரு கை ஜலமும், தினமும் அருந்தி திருப்தசித்தராய் விளங்கினர்.

இவர் வெளியேறுங் காலங்களில், கறுப்புக் கம்பளிப் போர்வையை யணிந்தும், இதர வேளையில் கௌபீனதாரி யாகவேயிருந்தும் வந்தனர். ஏகதேசம் அநேகமைல் சுமார் 40, 50 மைல் கால்நடைப் பிரயாணமாகவே செல்லுவார். திருச்சிராப்பள்ளிக்குப் போகுங் காலங்களில், குன்றிமணி சுவாமி மடத்தில் (தஞ்சாவூர் குளத்தெருவில்) தங்கித் திரும்புவார்.

ஜீவகாருண்யராகிய இவர், சமாதிகூடும் வேளைதவிர மற்றைய காலங்களில், துறவியைப்போல் நடவாது, ஓர் குடும்பத்தினர்போலவே நடித்துவருவார். இவரை யாதா மொருவரடைந்து தன் குறைகளைச் சொன்னால், அனுதாப முடன் கேட்டு தக்க ஆறுதலுந் தேறுதலும் அவர்களுக்குக் கூறியனுப்புவார்.

ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், தெலுங்கு பத்யம் (வேமன்ன சதகம் போன்ற) சொல்லி, அதன் சாராம்சங்களை

எளிய நடையில் விளக்கி அறிவுறுத்துவார். இவருடைய புத்திமதியைக்கேட்டு அதற்கு மாறுதலாக நடந்தவர்கள் வெகு சிலரே.

இம்மாதிரி பதினைந்து வருடங்கள் கழிந்தன. இதற்குப் பின்னர், இவர் ஆகாராதிக்கு வேகவைத்த நுவரம்பருப்பும் கொஞ்சஞ் சர்க்கரை நெய் சேர்த்து மத்தித்து எலுமிச்சம் பழத்தினளவு அருந்திவந்தனர். இத்தொண்டை அமிருதம் அம்மாள் (கோட்டையம்மாள்) ஏற்று, தினசரி வேலை தவறாமல் நடத்திவந்தனர்.

சில வருடங்களுக்குப் பின் ஓர் தினம், அம்மை அனுக்கிரகித்தவாறு கோட்டையம்மாளைப் பதினைந்து படி அரிசி சமையல் செய்வித்து ஊர் இளைஞர்கள் சூழ இருந்து உண்ணச்செய்து, தான் மத்தியிலிருந்து ஒரு சிறு கொட்டாங்கச்சி யன்னமேற்று

"வாய்பிடிக்க வயறு நிறைய கண்டத்திற்குள்
"போகும் படியாய்க் கலந்து ஓர் உருண்டை
"கொடுத்தாற் போதும், தெரிந்துக்கொண்டவர்
"தான் குரு எனக்கு"

"கோவணக்காரனென்று கூசாமற் கொண்டுவந்து
"சாதங் கொடுத்ததாயை சரணம் பண்ணிக்கொள்ளுவான்.

"கண்டவன் காட்ட மாட்டான், கொண்டவன்
"விடமாட்டான், இவன் மறைகிற வரைக்கும்
"சோறம்மா வென்றிருப்பான், தெரிந்து
"கொண்டவர்தான் குரு எனக்கு"

என்று சொல்லிப் புசித்தனர்.

அன்றுமுதலிவர் இறுதிவரையிலும், இவ்வாகாரமே அருந்தி வந்தனராகத் தெரிகிறது.

இவ்வூரில் சிலர் தாங்கள் அடைந்த அரிய மக்கட்பேறு இவரது தரிசன விசேடத்தாலாகியதென்று தூண்டப்பட்டவர்களாய், இவரை யடைந்து பகவத் கைங்கர்யஞ் செய்ய விருப்பமுள்ளோமென்று அறிவிக்க இவர், அன்னவர் உள்ளன் பிற்கிசைந்து, பஜனைமடம் உசிதமேன, ஆவிடைப் பிள்ளையார் கோவிலுக்கு வடபால் இவர் வீற்றிருந்த விடத்திற் கருகிலேயே ஒன்றை ஸ்தாபனஞ் செய்தார்கள்.

இம்மடத்தில், ஸ்ரீ கிருஷ்ணபகவான் சுப்பிரமணியர் மற்றும் பல மூர்த்த வடிவப்படங்களை யமைப்பித்துப் பிரதி சோமவாரம் சனிவாரம், விசேஷ தினங்களில் பெரியோர் சிறியோர் யாவரும் ஒருங்கு சேர்ந்து பஜனை செய்து வருவதைக் கண்ணுற்று சுவாமிகளும் மகிழ்வர்.

பின்னொருகாலத்தில், இவ்வூர் அப்பாதுரைபிள்ளை தம் மனைவியிருவருக்கும் புத்திரப் பேறின்றி வருந்தி, பழனியப்பருக்கு வேண்டுதல் புரிந்து, சுவாமிகளைத் தரிசித்தும் வருவார். இவரது மனைவி ஓர் ஆண்மகவு பெற்றனள். சில நாள் கழித்துப் பிள்ளையவர்கள் சுவாமிகளையடைந்து தன் பிரார்த்தனை விபரத்தையும் புத்திரன் பிறந்ததையும் தெரிவித்து தன் வேண்டுதல் குறைவின்றி நிறைவேற, சுவாமிகளை தம்முடன் பழனி மலைக்கு வர யிணங்கச் செய்து, இல்லம் திரும்பினர். ஓர் நல்ல சுபதினத்தில் குடும்ப சகிதம் சுவாமிகளுடன் பழனிமலையைச் சேர்ந்து, பழனியப்பரைத்

தரிசிக்குங் காலையில், சுவாமிகள் முன் மண்டபத்திலிருந்தே தவனிலெழுந்த ஆனந்தத்தைப் பத்யங்களாக,

"பார்த்தால் பழனிமலை பார்வையிட்டால் தங்கமலை
"ஆடிவிளையாடி யமர்ந்திருக்கச் சொல்லுமலை
"அதிசயம் என்ன சொல்லுவேன்
"சுப்பிரமணியனைக் கண்டால் வெகு சந்தோஷம்
"கல்லா யிருக்கிறன்.
"காட்சி பெற்று தேகத்தை விட்டுவிடுவேன்
"தேகத்தை விட்டால்
"குரங்குபோலிருக்கிறன், கொண்டுவாகாசென்கிறன்
"பஞ்சாமிர்த அபிஷேகம் பண்ணச்சொல்லி
"எகிறிக் குதிக்கிறன் அவன் முன்னலே
"செய்து வைத்த சிலை சுவாமி என்றல் பேசாது
"சாதமிட்டால் சாப்பிடாது
"வரங்கொடேன் என்று குந்தியிருக்கும்
"ஒன்றும் அறியமாட்டேன்
"ஓங்காரம் ஒன்றறிவேன்
"தன்னை யறிவேன் உன்னை யறிவேன்
"பின்னை யொன்றும் அறியமாட்டேன்
"பூதேவி சாக்ஷியாய்,
"தெரிந்துகொண்டவர்தான் குரு எனக்கு

என்று வெளியிட்டு, பிள்ளையவர்களுடன் மீண்டும் காட்டுப் புத்தூர் அடைந்தனர்.

இவ்வூருக்கடுத்த கோரைக்குத்தி கிராமம், ரெட்டியார் மரபினர் ஒருவர் துறவுபூண்டு அநேக நாடுகள் சஞ்சாரஞ் செய்து கடைசியாக இவரையடைந்து இவருக்குத் தொண்டு செய்து வந்தனர்.

இவ்வூர் சுற்றுக் கிராமங்களின் ஜனங்கள் தவிர, இதர நாடுகளிலிருந்தும் இவரது தரிசனமும் அன்பும் பெறுமாறு அநேகர் குடும்ப சகிதம் வந்து போவார்கள். இவர்களிற் சிலர், உடனே திரும்ப மனமிலாராய் இரண்டொரு தினம் இவர்பால் தங்கிவிடுவார்கள்.

இத்தகையார்க்கும், மற்ற அடியார்களுக்கும் இவ்வூர்க் குடும்பிகள் சிலரே தந்தம் எளியவருவாய்க்குத் தக்கபடி பகுந்து, அன்னமிட்டு ஆதரித்து வந்தனர். இதனுலிக்குடும் பங்களுக்கு ஏற்படும் அதிகச் செலவைக் கண்ணுற்ற இவர்

"யாவர்க்குமாம் உண்ணும்போழ தொருகைப்பிடி" யென்ற நீதிமொழியை யனுசரித்து கோரைக்குத்தியாரை தலைமையாக வமைத்து அடியார்களைக் கொண்டு தினசரி காவடியேற்று, இரந்து வந்த அன்னத்தை யாவரும் அருந் தும்படி செய்வித்தனர்.

இவ்வாறு சுமார் 63 வருடங்கள் காட்டுப்புத்தூரிலேயே இவர் வசித்தனர். இவரது 120-வது வயதில் குடிசை வாசத்தையும் விடுத்து முந்நாளில் இவரிடத்து அன்புபூண்டு ஆதரித்த சந்திரசேகரம் பிள்ளையின் பௌத்ரி வாலாம்பிகை வீட்டின் திண்ணையில் மூன்று மாதங்கள் தங்கினர். அக்கா லத்து இவருக்கு வேண்டிய உபசாரங்களை அமிருதம்மாள் செய்து வருவர்.

அவ்விடத்தைவிட்டு ஓர் தினம் அந்திநேரத்தில் ஷெடி அமிருதம்மாள் வீட்டுத் திண்ணையில் வந்தமர்ந்தனர். சில தினங்களாக சுவாமிகள் ஆகாராதிகள் உட்கொள்ளாமை யைப்பற்றி ஷெடி அம்மாள் கவலையுற,

"பசியெடுக்காது பார்வை பறக்காது
"வாசியுறங்காது யோகியானல்
"இளைப்பு கொடுக்காது ஏகாட்சரத்தில்
"தெரிந்துகொண்டவர்தான் குரு எனக்கு

"முத்திக்கு பங்கமில்லை இனி யிவன் பேசமாட்டான்
"வார்த்தைக்கு வார்த்தையில்லை
"வந்துபோக வாகனமில்லை
"கொடுத்து வாங்குகிற கடவுளரில்லை
"தெரிந்துகொண்டவர்தான் குரு எனக்கு

"வார்த்தை பெரிதல்ல வந்து போவது பெரிதல்ல
"சோத்துக்கிருப்பது பெரிதல்ல, சுனைங்கன்போல்
"கண்டறிகிறது பெரிது
"கண்டாநாதத்திற்குள் கண்மணியைத்
"தெரிந்துகொண்டவர்தான் குரு எனக்கு

"கண்மணியைக் கண்டு காட்சி பெறமாட்டாமல்
"பொய்மணி மேலாசைகொண்டு பிறந்திறந்தேன்
"ஈஸ்வர சங்கற்பம் என்ன செய்யலாம்.
"தெரிந்துகொண்டவர்தான் குரு எனக்கு

என்பதாக சுவாமிகள் புகன்றனர்.

இதற்கு மறுநாள் சேலத்திலிருந்து இங்கு அடைந்த அடியார்கள் இவருக்குப் பாதபூசை செய்து வணங்கினர்கள். அஸ்தமயமானவுடன் இவர் அமிருதம்மாளைக் கொண்டு தேங்காய் பழம் அவல் முதலியன வாங்கிவந்து நிவேதன மானபிறகு, வழக்கம்போல் குழந்தைகட்கு வழங்கி, சமாதியி லாழ்ந்தவர்

மறுதினம் சனிவாரம் காலை எழுமணிக்கு இவருக்குப் பாதபூசை நடந்த காலையில், அடியார்களிற் சிலர், இவர் சித்தியடையுங்காலம் அதிசமீபத்திலிருக்கிறதென ஓர்ந்தனர். உடனே கரூர் தமிழ்ப்பண்டிதர் அப்பாவுபிள்ளை யின்னும் அநேகரைத் தருவித்து, மடத்தைச் சேர்ந்த மனையில் ஆகம விதிப்படி சமாதி கட்டிடம் நிர்மானித்தனர்.

அநேக அன்பர்கள் சூழ, இவரிடத்திலிருந்து தோன் றிய திவ்ய ஜோதியைத் தரிசித்து வியந்திருக்கும்போதே கலியுகம் **5012** விரோதிகிருது-ஸ்ரீ மாசி மீ **28**உ ஆதிவாரம் கேட்டை நக்ஷத்திரம் கூடிய சுப தினத்தில் இம் மஹான் நித்திய விபூதியில் அந்தர்ப்பவித்தருளினர்.

மூன்று தினங்கள் இவரது பிரகிருதிக்கு அபிஷேக அலங் காராதிகள் செய்து, திரளான அன்பர்கள் குழுமிச் சூழ விதிவலம் வந்து, சமாதி நிலயத்துள் ஆகமமுறைப்படி அடக்கஞ் செய்தனர். பிறகு இவர் சமாதிக்கு 47 நாட்கள் நித்திய பூசையும் மறுதினம் மண்டலாபிஷேகமும், அடுத்த மூன்றுநாள் மஹோத்சவமுங்கொண்டாடி, அத்தினங்களில் எளிய அடியவர்களுக்கு அன்னமளித்து ஆடையும் வழங்கினர்கள்.

இம்மஹாராணியே ஸ்ரீ நாராயண பிரமேந்திர சுவாமிகளென வழங்குவாராயினர். இப்பெரியாரது திவ்விய சரித்திரம் சுருக்கமாகவே சில அன்பர்களின் வாயிலாகக் கேட்டதையும், சிலர் அப்போதைக்கப்போது நிகழ்ந்தவைகளைக் குறிப்பாக எழுதி வைத்ததிலிருந்தும், இங்கு எடுத்துக் கூறப்பட்டுளது.

இவர் காலத்து நிகழ்ந்த அற்புத செயல்களையும் இவரது மகத்துவங்கள் தெரியவந்த சந்தர்ப்பங்களையும் அன்பர்கள் கேட்டு ஆனந்தமடையுமாறு, இந்நூலின் கடைசியில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

சுவாமிகள் திருவாக்கினின்றுதித்த பத்யங்களனந்தம், இவரையடுத்திருந்த அன்பரிலொருவர் அவைகளை ஓலையேட்டில்வரைந்து, இராக்காலங்களில் ஷெ சுவடிக்கட்டை விசுவாசத்துடன் தலையணையடியில் வைத்துறங்குவர்.

இவர் இம்மாதிரி யெழுதி வருகிறது சுவாமிகளின் திருவுளத்திற்கு மாறாகயிருந்தது.

ஓர் தினங்காலை இவ்வன்பர்நித்திரைநீங்கி வழக்கம்போற் சுவடிக்கட்டை பிரித்துப் பார்க்கையில், ஏடுகள் செல்லரித்திருப்பதைக் கண்டுவியந்து, சுவாமிகள் பக்கலடைந்து தனது அபசாரத்தை க்ஷமிக்கும்படி வேண்டினர். அதினின்று மற்றவரும் இவரது அமுதவசனங்களை வரையாதொழிந்தனர்.

சுவாமிகள் அதிகநேரம் ஒருவருடனும் சம்பாஷணை செய்வதற்கு இடந்தருவதில்லை. அவரவர்களுக்குத் தக்கபடி

சில நீதிநெறிகளைப் போதித்து, வீண்பொழுது போக்காமலும், தங்கள் வேலையில் சோம்பலடையாமலும், குடும்ப விவகாரத்தில் அதிக அமைதியாகவும் வருவாயைக்கொண்டு திருப்தியடைந்தும் சந்தோஷமாக வாழ்நாள் கழிக்கப் பிரயத்தினப்படுமாறும் வற்புறுத்திக் கூறி யனுப்புவார்.

சுவாமிகளின் காலத்திலிருந்து மடத்தில் வசித்து வருகிற அன்பர்கள், இவரது வைபவங்களை இன்னும் விசிதமாகக் கூறவும் கேட்டிருக்கிறோம். அவைகள் இவ்விடத்தில் விரிதலுக்கஞ்சித் தொகுத்தே கூறப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ நாராயண பிரமேந்திர சுவாமிகள் சரித்திரம்
முற்றிற்று.

அனுபந்தம்.

சுவாமிகளைப்போல் உளைவுக்கு மணலை உண்டு வாதனை நீங்கியது.

மதுரையிலிருந்து ஓர் சாது இவரை யடைந்து இவரைப்போல் ஜலத்துடன் மணலை உட்கொண்டனர் அஃது வயற்றிற் சிக்குண்டு பிராணுபாயமடைய சுவாமிகள் விளக்கெண்ணெய்க் கொடுக்கச் செய்து சுகமடைந்து, பின் தன்னூர்ச் சேர்ந்தனர்.

இம்மஹாத்மா ஆகாரத்திற்கு மணலுஞ்ஜலமும் உண்கின்றனரே யிஃதென்ன விந்தை, யென்றறியக் கவனித்தபோது, நீரிலிட்ட சுண்ணாம்புக் கல்லைப் போன்று நீற்றுக் கழிவுற்றிருக்கக் கண்டனர்.

அமுது படைத்த முறையும் சம்பவமும்.

வீதியில் ஒவ்வொரு வீட்டாரும், சுவாமிகளுக்கு அன்னம் அளிக்க கோறிய நிமித்தம் இவர், ஏழு கொட்டாங்கச்சிகளை வீட்டிற் கொன்றாக வைத்துக்கொண்டு பிரதி தினம் தமக்கு ஒரு கொட்டாங்கச்சி யன்னமளிக்கும்படியும், ஏனையர் தந்தம் முறைமாற்றிக்கொள்ளுமென்றும் அன்னார் திருப்தியடையுமாறு மொழிந்தனர். இவ்வித கைங்கர்யத்திலோர் தினம், அனந்தலக்ஷ்மி யம்மாள் முறையில், கொட்டாங்கச்சி யன்னம் போதுமா வென்று வினவ, சுவாமிகள் போதா தென்றார். ஆனல், வீட்டுக்கு வாருங்கள் வயறு நிறைய அன்னம் படைக்கிறேனென இவரை யழைத்துச் சென்றனள் சுவாமிகள் வீட்டு வாயலை யடைந்து,

> “பராசத்தியின் வாக்கியம்:—தெருத்திண்ணை சொந்தம்,
> தெருவுக்கு வந்த சாதஞ் சொந்தம், அந்த நிருட்டுமுண்டை
> சொந்தம், வேறொன்றும் சொந்தமில்லை”..................
> தெரிந்து கொண்டவர்தான் குரு எனக்கு.

என்றியம்பி அமர்ந்தார்.

அனந்தலக்ஷ்மி யம்மாள், தம் வீட்டிற் சமைத்த (மூன்று படி யரிசி) சாதமும் பரிமாறி, அண்டை அயல் வீட்டி லிருந்தனவும் படைத்து, சுவாமிகள் உண்டு மௌனமா யிருக்க, அம்மாது திகிலடைந்து இவர்திறத்து தன் அறியாமைக்கு வருந்தியதை அங்குளளார் அறிந்து, ... "இஃதென்ன சுவாமிகள் குடிசையை விட்டு வீதிக்கு வந்தது, ஆச்சரியம்! இனி எவரும் அவரை வற்புறுத்த வேண்டாம், அவரது இஷ்டம்போல் நடத்துவது நமது கடமையென்று சொல்ல, சுவாமிகள் புன்சிரிப்புடன் எழுந்து தமது குடிசைக்கேகினர்.

சோதி தரிசனம்.

ஓர் நாளிரவு பஜனை மடத்திற்கு வந்த கோபால் செட்டியார் அருணசலம் பிள்ளை, சுந்திரம் பிள்ளை மூவரும் பக்கத்து அறையிலிருந்த சுவாமிகளைநோக்கி தாங்களிருக்கும் அறைக்குத் தீபமிருந்தால் சுகமாயிருக்குமென்றனர். சுவாமிகள் வேண்டாமென்ன, மூவரும் தங்களது விருப்பத்தை மறுக்கவாகாதெனப் பணிந்துரைத்தனர். சுவாமிகள் அவர்களை நாளை யிரவு பத்து மணிக்கு இவ்விடம் வந்து பார்த்து. தீபம் வேண்டும் வேண்டாமென்பதைத தெரிந்துகொள்ளுங்களென்று கூறினர்.

அப்படியே மூவரும் மறுதினம் இரவு பத்து மணிக்கு சாளரத்தின் வழியாக நோக்க, கட்பொறி கலங்கத்தக்கதோர் பிரகாசமான சோதியை சுமார் ஒரு மணி நேரம் பார்த்த வண்ணமாகப் பிரமித்துத் தெளிந்து திரும்பினர்கள்.

கன் மழை.

அங்கிலம் 1904-ஹுக்குச் சரியான தமிழ் குரோதி-ஹு வைகாசிமீ ஓர் தினம் மாலை 7 மணிக்குக் காட்டுப் புத்தூரில் பெருத்ததோர் கன்மாரி வருஷிக்க, ஜனங்கள் வெளிவர சாத்தியப்படாது பயங்கொண்டிருந்தனர். வெளி

யிலகப்பட்ட சிலர் காயமடைந்தும், சிலர் உயிர் துறந்தும், மாஞ் செடிகளெல்லாம் வேரோடு பெயர்ந்து மொடிந்துஞ் சிதைந்தும் போயின. பறவைகளும் நடைகாலிகளும் சேதமுற்றன. மாடி வீடு களுமிடிந்து பல கஷ்டங்களாயது. கன்மழையுங் காற்றும் நின்ற பின், மடத்திற்குப் பத்தடி தூரத்திலுள்ள ஓலைக்குடிசையில் வீற்றிரு க்கும் சுவாமிகளின்கதி யென்னவாயிற்றென்று அன்பர்கள் ஓடிவந்து பார்க்க, குடிசைமீதொரு கல்லேனும் வீழாது, குடிசையைச் சுற்றிக் கற்கோட்டையிட்டிருப்பதைக் கண்ட அனைவரும் வியப்புற்றனர்.

திருமண் காப்பு நீந்து தரியாமையை வினவியது.

தரிசிக்க வந்த வொருவர் சுவாமிகளே, தாங்கள் நாமம் விபூதி தரிப்பதில்லையா? என

"நாமம் போலாகிவிட்டேன்
நாத்தப் பிணத்துக்குள்ளே,
நாமம் சாற்றமாட்டேன்.
நாடறிய திருநீறு போலாகிவிட்டால்,
யமன் வந்து தொடமாட்டான்.
தாய் அவனை விடமாட்டாள்.
தனக்குள் விளையாடச் சொல்லிப் பார்த்திருப்பாள்.
தெரிந்துகொண்டவர்தான் குரு எனக்கு"

என்று கூற வந்தவர் வணங்கி நமஸ்கரித்துச் சென்றனர்.

யோகசாதனம் விரும்பியவர்.

உள்ளூர் வாசி விஸ்வநாதய்யர் என்பவர் யோகாப்பியாசங் கற்றுக் கொள்ள விரும்பி சுவாமிகளைத் தரிசித்து நின்று தம் வாய் திறவாமுன்னமே சுவாமிகள் கூறிய வாக்கியம்:—

"யாகம் செய்யத் தனமில்லை, யோகஞ்செய்யப் பலமில்லை, பூசை செய்ய பூலோகநாதனுக்குக் காலெங்கே கையெங்கே சிரசெங்கே? ஏகாக்ஷரத்தில் தெரிந்துகொண்டவர்தான் குரு எனக்கு."

உடனேவிப்ரர் திடுக்கிட்டு சுவாமிகளை நமஸ்கரித்துதனக்குளஏற்பட்ட வாக்கியத்தை சிரவணித்து "தாமெண்ணிவந்த காரியமின்னதென் ருராய்ந்தருளினர்" என்று கூறிப்போந்தார்.

நீண்ட காலமாகக் குன்ம வயற்று நோயால் பீடிக்கப்பட்டிருந்த குழந்தைவேற் பிள்ளை யவர்கள், ஓர் நாள் விசார முகத்துடன் சுவாமிகளை யடைய,

குன்ம நோய் நீக்கம் அடைந்தவர்.

"என் அப்பா! கஷ்டப்படுகிறாய்?

"வேளை வந்தால் தானே போய்விடும்"

என்று சுவாமிகள் கூறி வாய் மூடுமுன்னரே, அக்கொடிய வியாதி நீங்க குழந்தைவேற்பிள்ளை ஆனந்த பரவசராகி, சுவாமிகளை நமஸ் கரித்துச் சென்றார்.

ஒரு காலத்தில் பெரிய வியாதியாற் சுகவீனமுற்ற ஒருவன் இம்மடத்திற் றங்கி, சில மாதங்களில் வியாதி நிவாரணை யடைந்தான். சுவாமிகள் அவனை ஜோதிட நூல் வாசிக்கச் செய்து, அதன் பயனால் ஜீவிக்கும்படிசெய்தனர். இம்மனிதனாலேதான் சுவாமிகளின்பெயர் வெளியாயிற்று. சுவாமிகள் அன்னான் நூலில் தேர்ச்சியடைந்ததை வியந்து நகைத்தார்.

சுவாமிகள் பெயர் வெளியானது.

காட்டுப்புத்தூர் மிட்டாதாரிடம் காரியஸ்தராயிருந்து, இம் மஹானை போற்றி வழிபடும் யோசாமிப் பிள்ளை அவர்கள், தன் மனைவி மக்களுடன் அடிக்கடி சுவாமிகளிடம்சென்று தரிசித்துவருவார். இவரது மக்களில் அமிருதம்மாளுக்கு தக்க பருவத்தில் விவாஹமாகிப், பதி னைந்தாவது மாதம் தம் கணவர் விண்ணுலகமடைய, அவ்வம்மை தன் தாய் வீடு வந்து வசிக்கலானார். திருநெல்வேலியினின்று இக்குடும்பத் தின் பந்துவும் சாதுக்களிடம் அன்பு பூண்ட வொருவர் இங்கு வர, சுவாமிகளின் பிரபாவத்தை கேட்டு தரிசித்து திரும்புங்காலையில், 17 வயதுள்ள அமிருதம்மாளுக்கு ஆறுதல் கூறி, அம்மணி! இங்கு

இருதாரம் விலக்கிவிட்ட தடுப்பு

வசிக்கும் ஞானமூர்த்தியின் சேவையே உனக்கு சாலச் சிறந்த தென்று கூறிப் போயினர்.

அப்பெரியார் புகன்றவண்ணம் இப்பெண்மணி வாரம் ஒரு முறை சென்று சுவாமிகளை சேவித்துவருவர். ஓர்தினம் சுவாமிகள்,

"அடிக்கடி இவ்விடம் வாவேண்டாம்" என்றுமொழிந்தனர்.

இதுவும் நமது ஊழ்வினைப் பயனே! இவ்வரிய சேவைக்கும் நாம் உரிமைபற்றவளாக நம் காலபேதம் இடையூருக நிகழ்ந்தமை யெனக் கவலையுடன் குடும்டத்தில் தாய் தந்தையரால் ஆதரிக்கப்பட்டு காலப்போக்கைத் தவப்பொழுதாகக் கொண்டனர்.

ஓர்தினம் இவ்வம்மையார் தன் உறக்கத்தில் காவிவேடந்தாங்கிய ஒருவர்தோன்றி "சுவாமிகள் வரச்சொன்னர்" என்றுநிகழ்த்தியதாக சு வர் ப் ப ன ங் க ண் டு, அஃது உண்மையாகுமென்றே நினைத்து சுவாமிகளைத் தரிசிக்கச் செல்ல, அப்பொழுது சுவாமிகள்

"அம்மா வந்துவிட்டாயா?
"வருவாயோ வரமாட்டோயோ வென்றிருந்தேன்.
"இன்று முதல் தாயும் பிள்ளையுமாகக் காலங்கழிக்க வேண்டியது"
"பிறந்தாலிறக்காதே, யிறந்தாற் பிறக்காதே
"இருக்கிறவரையிற் காணுதே
"இருக்கப்பட்ட குருவைக் கண்டு உபதேசம் பெற்றுக்
"கொள்ள வந்திருக்கிறோம் என்று நினை
"நாம் ஒருவருக்கு குருவென்று நினைக்கவேண்டாம்"

என்று கூறியதை குரு மொழியாகயேற்று நாளதுவரையில் தம் வாழ்நாள் கழித்துவருகிருர்.

குருநாதரிடத்து அன்புபூண்டு தொண்டுசெய்தவரான குழந்தை வேற்பிள்ளை தனது சொந்தப் பொருளுடன் மற்ற அன்பர்களி னுதவியையுங்கொண்டு நித்யபூஜை மாதநக்ஷத்திரம் வருட குருபூஜை முதலியன யாவுங்குறைவின்றி பரிபாலித்து வந்தனர்.

கோயம்புத்தூரைச் சார்ந்த கன்னிப்பாளையம் வேளாண் மாபினரும் பக்தி வாய்ந்த 12 வயதுள்ள பழனியப்பன் துறவியாய்ப் பலவிடஞ் சுற்றி யிவ்வூரின்கண் வந்து குருநாதர் சந்நிதியில் கோனாக்குத்தியாருடன் உதவியாயிருந்து வருகிறார்.

குழந்தைவேற் பிள்ளையால் சுவாமிகளின் சமாதி நிலயத்திற்கு ஒரு மனை கைங்கர்யஞ் செய்யப்பட்டது. காட்டுப்புத்தூர் மாவடியான் அம்பலக்காரர் 17 வருடத்திற்கு முன்னரே, ஆயிரம் ரூபாய் பெறுமான நிலத்தைக் குருநாதர் மடாலயத் தருமத்திற்கு சாசனஞ் செய்திருக்கிறார். மேற்படியூர் வக்கீல் உமாபதி பிள்ளை யவர்களின் மனைவி உண்ணாமுலை அம்மாள் சுவாமிகளின் நித்திய பூசைக்கென ஒரு காணி நிலம் (அரை செய்) சாசனஞ் செய்திருக்கிறார்.

வேண்டுகோள்

அநேக அன்பர்களின் பொருளுதவியால் சுவாமிகளின் கர்ப்பக்கிரஹம் புதுப்பித்தும் அதற்கெதிரில், குருபூஜா விசேஷ காலங்களிற் கூடும் அடியார்கள் தங்குவதற்கேற்ற வசதியில்லாமையை முன்னிட்டு ஓர் மண்டபக் கட்டிடம் நிர்மாணிக்க முயன்று வருகிறோம். இவ்வரிய கைங்கரியத்தைப் பூர்த்தி செய்ய இன்னமும் திருவருட் செல்வர்களின் பொருளுதவியைக் கோரினவர்களா யிருக்கிறோம். சுபம்.

சற்குருநாதன் துணை.

ஹரி

ஸ்ரீ

நன்றாக, குருவாழ்க, குருவேதுணை.

புவனேஸ்வரி அகவல்.

ஓம் மூலத் தெழுந்த மூர்த்தியாளே
ஞாலம் படைத்த ஞானக் கொழுந்தே
நான்முகன் வடிவாய் ஞாலத்திருந்து
வானுல கெங்கும் வகைவகையானாய்
கரியமாலென்னுங் காட்சியானாய்
உரியதோ ருருத்ர னாகியுகந்தாய்
மஹேஸ்வர னென்னும் வடிவுமானாய்
தயாநிதியான சதாசிவம் நீயே
பஞ்ச முகமாய்ப் பாருலகெங்கும்
அஞ்சறிவாகி யனைத்துயிரானாய்
ஆறுமுகமா யசுரர் குலத்தை
வேறுபடுத்தும் வித்தகத்தாயே
ஏழுமுகமா யிரேழுலகுந்
தாழ்வில்லாத தவப்பயனானாய்
எட்டுமுகமா யெண்கலையாகி
மட்டில்லாத வடிவுமாகினாய்

நவமுகமாகி நால்வகைச் சனனப்
பவமதுநீக்கும் பைங்கிளியாளே
பத்துமுகமாய்ப் பாருலகெங்கும்
வுத்த பொருளா யுகந்துநிறைந்தாய்
ஓங்காரத்தி லுதித்தபொருளே
ரீங்காரத்தி லினிதிருப்பவளே
ஐயுங்கிலியுஞ் சவ்வுமானவளே
சவ்வுங்கிலியும் அவ்வுமானவளே
ரீயுங்கிரீயும் ஸ்ரீயுமானவளே
ஸ்ரீயும் கிலியும் ரீயுமானவளே
முக்கோணத்தில் மூலமந்திரமாய்
அக்கோணத்தி லமர்ந்தாய்நீயே
ரூம்ரீயும்ராம் றவ்வுமானவளே
றவ்வும் ரீயும்ராம் ரூமுமானவளே
சட்கோணத்திற் றனமர்ந்திருந்து
புட்பமாரி பொழிந்திடவேதான்
கருணைக்கொடியே காக்ஷிக்கரசே
அருளுதயமான ஆட்சிப்பொருளே
வடுகவடுகி வடுகனுதி
கடுகவா வாவென் கவலைகள்தீர
நமசிவாய நவமணியாளே
வமசியென்னும் வாலாம்பிகையே
சிவாய சிவாய வாசிவாவா
அபாயம்வாரா தடியேனைக்காரும்
அங்கங்கெங்கு மங்குமானவளே
இங்கெங்கெங்கு மிங்குவானவளே
உங்கெங்கெங்கு முங்கிளியாகி
லங்வங் வங்கும் வங்கிளி வாயால்

சிங்சிங் சிங்கும் சிங்கினிதாயே
சரஅணபவா சயலொளிபவா
பரிபுரபவா பவஒளிபவா
திரிபுரபவா திகழொளிபவா
ஹரி ஹரி ஹரி ஹரிநாரணியே
திரி திரி திரி சிவசாம்பவியே
காளிபந்து கபாலிபந்து
நீலிபந்து நிமிலிபந்து
ஆதிபந்து அனுதிபந்து
சோதிபந்து சுந்தரிபந்து
ஓங்கிரூங் காளியே ஆங்கிரூங் காளிநீ
ஓம் நமசிவாய ஓங்காராயி
ஆம் ஹரியென்னும் அக்ஷரப் பொருளே
நமசி வயமான நாதனிடத்தே
இமைப்பொழுதும் நீங்கா திருப்பதுபோல
எளியேன் வலப்பாகத்தி லென்றுமிருந்து
பழியாம் வறுமை பற்றறுப்பாயே
பகவதியாயி பாடலிநாசகி
அகமதிற்றுதிக்கு மன்பர்க்கெளியாய்
சமயவீரிநீ தக்கன் குழவியாய்
அமயவராகி அங்குசரூபி
காளி காளி கங்காளரூபி
வாழி வாழி வல்பிணி தீர்த்தென்
உளத்திலிருந்த ஊழ்வினையதனை
கழட்டிவிடுவாய் கங்காளரூபி
அகோர அகோர அசுரகுல நாசகி
எக்கலாதேவி யேகபரஞ்சோதி
திக்கெல்லாம் படைத்த செகதீஸ்வரியே

அநுமந்தசக்கரத் தில்லமர்ந்திருந்து
அநுபூதியாகி வைஷ்ண வராகி
நாற்பத்து முக்கோண நாயகியாகி
கார்க்கும் பொருளே கண்ணுக் கொளியே
ஏகாபரணைத் திருக்குநாரணியே
கார் கார் கார் கார் காருண்ய சௌந்தரி
பஞ்சப் பரணைப் பார்வதிநீயே
அஞ்சாப்பிணியை அறுக்கும்வடுகி
சக்ராபரணைத்திற் றுனையர்ந்திருந்து
கர்த்தாவாகிக் காட்சி கொடுப்பாய்
நவ்வாபரணைத் திருக்குநாரணியே
பவமானதுவை பற்றறுப்பாயே
கோடையிடி போல் கொம்பனையாளே
வாடைபோலும் வாவா வாவா
பில்லி சூனியம் பெரும்பிணி முதலாய்
அல்லலறுக்கும் ஆரணங்கே நீ
தலைவலிகுளிருந் தாகச்சுரமுந்
குலைவலி குன்மந் துட்ட ரோகங்களும்
பெருவயிரினை பெரியவியாதியுங்
கருங்காக்கை வலிப்புங் கடுமுயல் வலிப்புங்
குதிரைவலிப்புங் கொடுநோயானதும்
அதிரப்பறிக்கும் ஆனந்தாயி
ஊனுமுயிரும் நீயாயிருக்க
வினைப்பிணிகள் இடறுகள் வருமோ
இந்திரனக்கினி இயமநிருதி
அந்திவருணன் வாயுகுபேரன்
ஈசானியனு மிருக்கக் காவலாய்
கூசாமலேதான் வருமோ பிணிகள்

தாக்குத்தாக்கு சகலவினைகளைப்
போக்குப்போக்கு பொல்லா வினைகளை
நீக்கியுன்பாத நினைவைக்கொடுத்து
ஆக்கியளிப்பாய் அம்பிகை கௌரி
காமகோட்டத்தபி ராமித்தாயே
வாமத்துரைச்சி வாலைப்பறையே
திரிபுரைபுவனை தியாகேஸ்வரியே
பரிபுரயாமளை பரமகல்யாணி
நாரணன்சோதரி ராஜராஜேஸ்வரி
ஆரையுமாசத்தி அம்பிகைத்தாயே
சுந்தரிஞானி ஜோதிமணி விளக்கே
விந்தரி பார்வதி விமலிவராகியே
அரனையளித்து அரன்பதியானுப்
பரமபதத்தி பஞ்சாக்ஷரத்தி
அன்னநடைச்சி மின்னுமிடைச்சி
கன்னல்மொழிச்சி சொர்னநிறத்தி
புண்ணியர் நெஞ்சிற் பிறியாதவளே
துன்னியர் நெஞ்சிற் றுதியாதவளே
தஞ்சமென்றவரைத் தான்காப்பவளே
அஞ்சலென்றவர்க்கு அஞ்சல்நாயகியே
உந்தன்பாதம் உகந்தெனக்களித்து
எந்தனையாள்வது இதுவுன்பாரம்
உன்னையல்லாதொரு பொருளைநினையேன்
அன்னையேயுன்றன் அடைக்கலமம்மா
தேவிபோற்றி திரிபுர சுந்தரியேபோற்றி
பூவிபோற்றி புவனேஸ்வரியே போற்றி
மாதா வாலாம் பிகையே போற்றி
மாதாவும்நீயேயாகி மைந்தனனுன்னடியேனுனல்

என்னைரக்ஷிப்ப திருசிலபாரமோ
அன்னையேயென்னை ஆள்வதுன்பாரம்
ஆட்சியான அம்பிகைத்தாயே
காட்சிகொடுக்குங் கருணையே நமஸ்து
வாலாம்பிகையே மாதா நமஸ்து
நீலாயதாட்சி நிமலி நமஸ்து
திரிபுரசுந்தரி தேவிநமஸ்து
அரியதவத்தின் அருளே நமஸ்து
தவத்தைக் கார்க்குந் தாயே நமஸ்து
புவனேஸ்வரியே போற்றிநமஸ்து
வாலைகோகிலாம்பாள் மலரடிநமஸ்து
புவனேஸ்வரி பாதமே நமஸ்து

புவனேஸ்வரி அகவல்

முற்றிற்று.